5
26 JUN 1952
MADRAS

சிறுவர்
தமிழ்நாட்டு வாசகம்

SCANNED

(இரண்டாம் வகுப்பிற்குரியது)



...டியயல் பப்ளிஷர்ஸ்
...ங்கம்மாளத்தெரு—திருச்சிராப்பள்ளி

TB
031(52) N51
133165

சிறுவர் தமிழ்நாட்டு வாசகம்

(இரண்டாம் வகுப்பிற்குரியது)

[ஆரம்பப் பாடசாலையின் புதிய பாட திட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர்:

வி. மரிய அந்தோனி, பி. ஓ. எல்.,

தமிழ் விரிவுரையாளர்,

புனித சூசையப்பர் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி.

தி ஐடியல் பப்ளிஷர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1951 [விலை 6 அணா

SIRUVAR TAMIL NATTU VACHAKAM

For Standard II

BY

V. MARIA ANTONY, B.O.L.,

THE IDEAL PUBLISHERS,

No. 1. Chinnakammala Street : : Tiruchirappalli

First Edition—1951

Rajan Electric Press, Madras-1

முகவுரை

சிறுவர் தமிழ்நாட்டு வாசகம் என்ற வரிசையில் இது இரண்டாம் புத்தகம். இரண்டாம் வகுப்பிற்கு உரியது. முதற் புத்தகம் சிறுவர் கற்றிருக்கும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதனைத் தழுவி இப்புத்தகத்தில், முதலில் பயிற்சிப் பாட்டுகள் நான்கு தரப்பட்டுள்ளன. பின்னர் வாக்கியப் பாடம் ஆரம்பம் ஆகிறது. சிறுவருக்குத் தெரிந்த சொற்களை அடிப்படையாகக் கொண்டு இப்பாடங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் வரும் பயிற்சிகள் சிறுவர் கற்றவைகளைத் தம் மனத்தில் பதியத் துணைபுரியும். படப் பயிற்சிகள் சிறுவரின் உற்று நோக்கும் உணர்வைத் தூண்டும்.

பதினோராம் பாடத்திலிருந்து பத்தி (Para) முறையில் பாடங்கள் அமைந்துள்ளன. எளிய நடையில் சிறுவரின் வயதுக்கும், அறிவுக்கும் ஏற்ற முறையில் பாடங்கள் அமைந்துள்ளன. பாடங்களின் முடிவில் வரும் கேள்விகளும், பயிற்சிகளும் சிறுவரின் அறிவைப் பெருக்கும். இனிய பாடல்களும் இடையிடையே வந்துள்ளன.

கல்வி அதிகாரிகளும், ஆசிரியரும் தகுந்த ஆதரவு காட்டுவார்கள் என்று நம்புகிறேன். இதனை வெளியிட்டு உதவிய, "தி ஐடியல் பப்ளிஷர்ஸ்" உரிமையாளர் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

திருச்சிராப்பள்ளி,
20—5—1951.

வி. மரிய அந்தோனி

பொருளடக்கம்

எண்			பக்கம்
பயிற்சிகள்		....	
	இவற்றின் பெயரை எழுது	...	5
	படம் சேர்த்துப்படி	...	6
	சரியான சொல்லைக்காட்டு	....	7
	படத்தில் காட்டு	...	8
1.	கிளி	....	9
2.	கிளிப்பாட்டு	...	11
3.	அணில்	...	12
4.	ஆலமரம்	...	14
5.	நிறங்கள்	....	16
6.	விடுகதைகள்	....	18
7.	வாக்கியப் பயிற்சி	...	19
8.	வகுப்பு அறை	...	20
9.	சுவைகள்	...	21
10.	பசு	...	23
11.	தொழிலாளிகள்	....	25
12.	காகம்	...	28
13.	உண்மை பேசுதல்	....	31
14.	ஓடி விளையாடு பாப்பா	....	32
15.	புகை வண்டி ஏறுதல்	...	33
16.	எங்கள் ஊர்	....	36
17.	நீல மாம்பழம்	...	39
18.	பருவ காலங்கள்	...	42
19.	நல்ல பையன்	...	45
20.	சந்தை	...	46
21.	நரியும் வெள்ளாடும்	...	49
22.	நாணயங்கள்	...	52
23.	ஒற்றுமையே உறுதி தரும்	....	55
24.	நமது கடமைகள்	...	56
25.	சுத்தம் சுகம் தரும்	....	57
26.	வாழை மரம்	...	60
27.	கடிதத்தின் பிரயாணம்	....	63
28.	பூக்களின் அரசன்	....	66
29.	ஆத்தி சூடி	....	69
30.	உலக நீதி	...	70
	பொன் மொழிகள்	....	72

சிறுவர் தமிழ் நாட்டு வாசகம்

இரண்டாம் வகுப்பிற்குரியது

பயிற்சி 1



இவற்றின் பெயரை எழுது

பயிற்சி 2

படம் சேர்த்துப் படி :

பழம் தின்கிறது.

இது நல்ல



தண்ணீரில் நீந்தும்.

இது எங்கள்



பாடம் படிக்கிறான்.

இது எங்கள்

பயிற்சி 3.

மௌனமாகப் படி ; சரியான சொல்லைக் காட்டு :

கோழி

புறா

மயில்

கழுதை

நரி

குதிரை



நண்டு

ஆமை

முயல்

மல்லிகைப் பூ

ரோஜாப் பூ

தாமரைப் பூ



பயிற்சி 4



பின்வரும் வார்த்தைகளைப் படி ; படத்தில் காட்டு.

வீடு	கதவு	ஏற்றம்	பனைமரம்
செடி	தெரு	சன்னல்	சைகிள்
சிறுமி	கிணறு	சேவல்	குழந்தை
பசு	கூரை	சிறுவன்	பம்பரம்
ஏணி	காளை	கன்று	கைவண்டி



1. கிளி

1. இது ஒரு கிளி.

2. கிளி அழகான பறவை.

3. கிளியின் நிறம் பச்சை.

4. அதன் அலகு வளைந்து இருக்கும்.

5. கிளியின் அலகு சிவப்பு நிறம்.

6. கிளியின் கால் குட்டையாக இருக்கும்.

7. கிளியைக் கூண்டில் வளர்ப்பார்கள்.

8. கிளியைப் பேசப் பழக்கலாம்.

9. கிளி பேசுவது அழகாய் இருக்கும்.

10. "அக்கா, அக்கா! கள்ளன், கள்ளன்!"

பயிற்சி

1. இந்த வார்த்தைகளை மௌனமாய்ப் படி ; முந்தின பாடத்தில் காட்டு.

இது	நிறம்	பச்சை	அழகாய்
கிளி	அலகு	பறவை	அழகான
ஒரு	கால்	சிவப்பு	பேசுவது

2. கேள்வியையும் விடையையும் கவனி :

(1) கேள்வி : *கிளியின் நிறம் என்ன ?*
விடை : *கிளியின் நிறம் பச்சை.*

(2) கேள்வி : *கிளியின் அலகு என்ன நிறம் ?*
விடை : *கிளியின் அலகு சிவப்பு நிறம்.*

(3) கேள்வி : *கிளி பேசுவது எப்படி இருக்கும் ?*
விடை : *கிளி பேசுவது அழகாய் இருக்கும்.*

(4) கேள்வி : *நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?*
விடை : *நான் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்.*

(5) கேள்வி : *நீ எங்கே போகிறாய் ?*
விடை : *நான் பள்ளிக்கூடம் போகிறேன்.*

2. கிளிப்பாட்டு

1. பச்சைக் கிளியே!
வாவா ;
பாலும் சோறும்
உண்ணவா;
கொச்சி மஞ்சள்
பூசவா
கொஞ்சி விளை
யாடவா,

2. கவலை எல்லாம்
நீங்கவே,
களிப்பு எழுந்து பொங்கவே,
பவள வாய் திறந்துநீ
பாடு வாயோ? தத்தம்மா!

3. வட்ட மாய்உன் கழுத்திலே
வான வில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யார்அம்மா?
யான் அறியக் கூறம்மா!

4. பையப் பையப் பறந்துவா;
பாடிப் பாடிக் களித்துவா ;
கையில் வந்து இருக்கவா ;
கனிஅ ருந்த ஓடிவா.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

3. அணில்

1. இது ஒரு அணில்.
2. அணில் ஒரு சிறிய பிராணி.
3. அணிலின் முதுகில் கோடுகள் உண்டு.
4. அணிலின் வாலைப் பார்.
5. அதன் வால் நிமிர்ந்து இருக்கிறது.
6. வாலில் மயிர் அடர்ந்து இருக்கிறது.
7. அணிலின் பற்கள் கூர்மையாய் இருக்கும்.
8. அது தன் பற்களால் கொட்டைகளை உடைத்துத் தின்னும்.
9. அணில் தத்தித் தத்தி ஓடும்.
10. அணிலே, அணிலே! இறங்கி வா.

வால்	என்ன	அணில்	பிராணி
அது	சிறிய	கோடு	நிமிர்ந்து
வாவா	முதுகு	பற்கள்	அடர்ந்து
படம்	மயிர்	கூர்மை	கொட்டை

பயிற்சி

1. இந்தக் கேள்விகளுக்கு விடை எழுது :

(1) *அணிலின் முதுகில் என்ன உண்டு?*

(2) *அணிலின் வால் எப்படி இருக்கிறது?*

(3) *அணில் பற்களால் என்ன செய்யும் ?*

2. கீழே வருவனவற்றைக் கவனி :

இது அணில் ———.

இது அணில் படம்.

——— வாலைப் பார்.

***அணிலின்** வாலைப் பார்.*

3. கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுது :

(1) *அணில் ஒரு சிறிய———.*

(2) *வாலில் ———அடர்ந்து இருக்கிறது.*

(3) *———பற்கள் கூர்மையாய் இருக்கும்.*

(4) *அணிலின்———கோடுகள் உண்டு.*

(5) *கிளியின் அலகு———நிறம்.*

(6) *கிளி பேசுவது அழகாய்———.*

(7) *அதன் அலகு———இருக்கும்.*

(8) *கிளியின்———குட்டையாய் இருக்கும்.*

(9) *பச்சைக் கிளியே! ——— ———.*

(10) *அணிலே, அணிலே! ———வா.*



4. ஆலமரம்

1. இது ஓர் ஆலமரம்.
2. மரங்களில் பெரியது ஆலமரம்.
3. ஆலமரம் படர்ந்து வளரும்.
4. அதற்கு விழுதுகள் உண்டு.
5. விழுதுகள் கிளைகளைத் தாங்கி நிற்கும்.
6. ஆலம்பழம் சிவப்பு நிறமாய் இருக்கும்.
7. ஆலம்பழத்தைப் பறவைகள் தின்னும்.
8. ஆலமரம் குளிர்ந்த நிழல் தரும்.
9. அதன் நிழலில் பலர் தங்கலாம்.

ஓர்	வளரும்	ஆலமரம்	நிழல்
கிளை	தின்னும்	பெரியது	உண்டு
தரும்	குளிர்ந்த	நிற்கும்	படர்ந்து
பலர்	மரங்கள்	ஆலம் பழம்	விழும்

பயிற்சி

1. இந்தக் கேள்விகளுக்கு விடை எழுது :

(1) *மரங்களில் பெரியது எது?*

(2) *ஆலமரம் எப்படி வளரும்?*

(3) *விழுதுகள் எவற்றைத் தாங்கி நிற்கும்?*

(4) *எது சிவப்பு நிறமாய் இருக்கும்?*

2. கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுது.

(1) *இது———ஆலமரம்.*

(2) *அதற்கு———உண்டு.*

(3) *ஆலம்பழத்தைப் பறவைகள்———.*

(4) *———நல்ல நிழல் தரும்.*

(5) *———நிழலில்———தங்கலாம்.*

3. கேள்விகளைக் கவனி; கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுதுக :

(1) கேள்வி ; *உன் பெயர் என்ன?*
விடை : *என் பெயர் ———*

(2) கேள்வி : *உன் ஊர் எது?*
விடை : *என் ஊர் ———*

(3) கேள்வி : *நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?*
விடை : *நான் ——— வகுப்பில் படிக்கிறேன்.*

(4) கேள்வி : *உங்கள் ஊரில் ஆறு உண்டா?*
விடை : *எங்கள் ஊரில் ஆறு———*

5. நிறங்கள்

1. பால் வெள்ளை நிறம்.
2. காக்கை கறுப்பு நிறம்.
3. வானத்தின் நிறம் நீலம்.
4. பொன்னின் நிறம் மஞ்சள்.
5. இலை பச்சை நிறம்.
6. பவளம் சிவப்பு நிறம்.
7. கத்தரிப் பூ ஊதா நிறம்.
8. கறுப்புக் கோழியைப் பார்.
9. அதன் முட்டை என்ன நிறம்?
10. அதன் முட்டை வெள்ளை நிறம்.
11. இரத்தம் என்ன நிறம்?
12. இரத்தம் சிவப்பு நிறம்.
13. சுண்ணாம்பின் நிறம் என்ன?
14. சுண்ணாம்பின் நிறம் வெள்ளை.

நீலம்	வெள்ளை	மஞ்சள்	சிவப்பு
ஊதா	கறுப்பு	பச்சை	காக்கை
கோழி	வானம்	பவளம்	இரத்தம்
முட்டை	பொன்	கத்தரி	சுண்ணாம்பு

பயிற்சி

1. இந்தக் கேள்விகளுக்கு விடை எழுது:

(1) வானத்தின் நிறம் என்ன?

(2) எது ஊதா நிறம்?

(3) இரத்தம் என்ன நிறம்?

(4) புல்லின் நிறம் என்ன?

2. கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுது:

(1) காக்கை ——— நிறம்.

(2) ——— நிறம் மஞ்சள்.

(3) பவளம் சிவப்பு ———.

(4) முட்டை ——— நிறம்.

(5) பால் ——— ———.

3. வாக்கியங்களைக் கவனி; சரியா தப்பா என்று சொல்:

(1) கொக்கு வெள்ளை நிறம்.

(2) கிளியின் அலகு கறுப்பு நிறம்.

(3) தாமரைப்பூ மஞ்சள் நிறம்.

(4) செம்பருத்திப்பூ பச்சை நிறம்.

(5) யானை சிவப்பு நிறமாய் இருக்கும்.

(6) கடல் நீரின் நிறம் நீலம்.

(7) வாழைப்பூ ஊதா நிறம்.

(8) மல்லிகைப் பூவின் நிறம் மஞ்சள்.

6. விடுகதைகள்

1. என்னைப் பார்த்துச் சிரிப்பான்;
என்னைப் போல இருப்பான்;
என்ன வேலை செய்யினும்
என்னைப் போன்றே செய்வான்;
பேசிப் பேசிப் பார்ப்பான்;
பேச்சில்லாமல் விழிப்பான்.

—அவன் யார்?

2. ஓ ஓ மரமே! உயர்ந்த மரமே!
ஒரு பிடி இலையும் உதவாத மரமே!

—அது என்ன மரம்?

3. ஓடோடும் சங்கிலி; உருண்டோடும்சங்கிலி;
பள்ளத்தைக் கண்டதும் பாய்ந்தோடும்
சங்கிலி— அது என்ன?

4. கொம்பு போல இருப்பான்;
கொஞ்சம் கொஞ்சம் பெருப்பான்;
பந்து போலத் திரள்வான்;
படிப் படியாய்க் குறைவான்;
மங்கி மங்கி மறைவான்;
மாறி மாறிப் பிறப்பான்

—அவன் யார்?

1. கண்ணாடி 2. கொடி மரம்
3. தண்ணீர் 4. சந்திரன்

7. வாக்கியப் பயிற்சி

நான் படிக்கிறேன்.

நாம் படிக்கிறோம்,

நாங்கள் படிக்கிறோம்.

நீ எழுதுகிறாய்.

நீர் எழுதுகிறீர்.

நீங்கள் எழுதுகிறீர்கள்.

அவன் பாடுகிறான்.

அவள் பாடுகிறாள்.

அவர் பாடுகிறார்.

அவர்கள் பாடுகிறார்கள்.

அது பறக்கிறது.

அவை பறக்கின்றன.

அவைகள் பறக்கின்றன.

நான்	நாம்	நாங்கள்
நீ	நீர்	நீங்கள்
அவன்	அவள்	அவர், அவர்கள்
அது	அவை	அவைகள்



8. வகுப்பு அறை

கேள்விகளைப் படி; படத்தைப் பார்; விடை எழுது:

1. இது என்ன அறை?
2. இங்கு எத்தனை மாணவர் இருக்கின்றனர்?
3 நாற்காலி எதன் அருகில் இருக்கிறது?
4. புத்தகம் எதன் மேல் இருக்கிறது?
5, அறையில் எத்தனை சன்னல்கள் தெரிகின்றன?
6. கடிகாரம் எங்கே இருக்கிறது?
7. ஆசிரியர் என்ன எழுதுகிறார்?
8. ஆசிரியர் எதன்மேல் எழுதுகிறார்?
9. கரும்பலகையின் நிறம் என்ன?
10. மைக்கூடு எங்கே இருக்கிறது?
11. மைக்கூட்டின் அருகில் இருப்பது என்ன?
12 இந்த மேசைக்குக் கால்கள் எத்தனை?

9. சுவைகள்

1. நாம் நாக்கினால் சுவையை அறிகிறோம்.
2. சுவைக்கு ருசி என்றும் பெயர்.
3. கரும்பின் சுவை இனிப்பு.
4. சர்க்கரையும் இனிப்பாய் இருக்கும்.
5. எலுமிச்சம் பழம் புளிக்கும்,
6. மங்காயின் சுவை புளிப்பு.
7. பாகற்காய் கசப்பாய் இருக்கும்,
8. மிளகாய் காரம் உள்ளது.
9. உப்பின் சுவை உவர்ப்பு.
10. பாக்கின் சுவை துவர்ப்பு.
11. விளாங்காயும் துவர்ப்பாய் இருக்கும்.
12. இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம், உவர்ப்பு, துவர்ப்பு என்று சுவைகள் ஆறு வகைப் படும்.

ஆறு	**உப்பு**	**இனிப்பு**	**சர்க்கரை**
ருசி	**வகை**	**புளிப்பு**	**மிளகாய்**
சுவை	**பெயர்**	**கசப்பு**	**பாகற்காய்**
நாக்கு	**பாக்கு**	**உவர்ப்பு**	**விளாங்காய்**
கரும்பு	**காரம்**	**துவர்ப்பு**	**மாங்காய்**

பயிற்சி

1. விடை எழுதுக :
   (1) கரும்பின் சுவை என்ன ?
   (2) எதன் சுவை புளிப்பு ?
   (3) எது காரம் உள்ளது ?
   (4) சுவைகள் எத்தனை வகை ?
   (5) விளாங்காயின் சுவை என்ன ?

2. கோடிட்ட இடத்தில் சரியான சுவையின் பெயரை எழுதுக :

(1) மிட்டாய் —— உள்ளது.

(2) புளியின் சுவை ——.

(3) மிளகு —— உள்ளது.

(4) கடல் நீரின் சுவை ——.

(5) வேப்பங்காய் —— உள்ளது.

(6) பாக்கின் சுவை ——.

3. வாக்கியங்களைக் கவனி : சரியா, தப்பா என்று சொல் :

(1) நாம் கண்ணால் சுவையை அறிகிறோம்.

(2) கற்கண்டின் சுவை காரம்.

(3) மாங்காய் இனிப்பாய் இருக்கும்.

(4) சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

(5) அணில் ஒரு சிறிய பிராணி.

(6) ஆலமரத்தின் விழுது பல் விளக்க உதவும்.

(7) மிளகாய்ப்பழம் பச்சை நிறம்.



10. பசு

1. பசு ஒரு சாதுவான பிராணி
2. அது வீட்டில் வளரும்.
3. பசு நமக்குப் பால் தருகிறது.
4. பால் நல்ல உணவு ஆகும்.
5. பால் குடிப்பதற்கு இனிமையாய் இருக்கும்.
6. காய்ச்சின பாலில் பிரை ஊற்றினால் தயிர் ஆகும்
7. தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம்.
8. வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.
9. நெய் மிகவும் சத்து உள்ளது.
10. பசுவின் கன்று துள்ளி ஓடும்.
11. பசு தன் கன்றினிடம் அன்பாய் இருக்கும்,
12. நீ பசுவினிடம் அன்பாய் இரு.

தயிர்	மிருகம்	சாது	காய்ச்சின
நெய்	இனிமை	நல்ல	கன்றினிடம்
சத்து	வளரும்	பிரை	பசுவினிடம்
கன்று	பிராணி	உதவு	வெண்ணெய்

பயிற்சி

1. விடை எழுக

(1) எது நல்ல உணவு ஆகும்?

(2) தயிரைக் கடைந்தால் என்ன கிடைக்கும்?

(3) எதை உருக்கினால் நெய் ஆகும்?

(4) எது துள்ளி ஓடும்?

2. மௌனமாகப் படி:

நான் ஓடினேன். நாம் ஓடினோம்.

நாங்கள் ஓடினோம்.

நீ ஓடினாய். நீர் ஓடினீர்.

நீங்கள் ஓடினீர்கள்.

கந்தன் ஓடினான். அவன் ஓடினான்.

சீதை ஓடினாள். அவள் ஓடினாள்.

ஆசிரியர் ஓடினார். அவர் ஓடினார்.

பிள்ளைகள் ஓடினார்கள். அவர்கள் ஓடினார்கள்.

பசு ஓடினது. அது ஓடினது.

பசுக்கள் ஓடின. அவை ஓடின.

11. தொழிலாளிகள்

இவன் ஒரு குயவன். குயவன் மண் பாத்திரங்கள் செய்வான். குயவன் முதலில் களிமண்ணை நன்ருகப் பிசைவான். பிறகு, அம் மண்ணைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றுவான். அப்போது, அவன் களிமண்ணைக் கையால் திருத்திப் பாத்திரங்களை அமைப்பான். பானை, சட்டி முதலியன அவன் செய்யும் பாத்திரங்கள்; மண் பாத்திரச் சமையல் உடம்புக்கு நல்லது.

இவன் ஒரு தட்டான். இவன் பொன்னுலும் வெள்ளியாலும் நகைகள் செய்வான். மோதிரம், சங்கிலி, வளையல், கம்மல் முதலியன பொன்ஞல் செய்யப்படும். வெள்ளியால் தண்டை, கொலுசு முதலியன செய்யலாம். வைரம் இழைத்த நகைகள்அழகாய் இருக்கும்.

இவன் ஒரு கொல்லன். கொல்லனுக்குக் கருமான் என்றும் பெயர் உண்டு. கொல்லன் இரும்பைக் கொண்டு பொருள்கள் செய்வான். இவன் முதலில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அடிப்பான். பிறகு வேண்டிய பொருள்களைச் செய்வான். மண்வெட்டி, கோடரி, அரிவாள், பூட்டு, சாவி முதலியன கொல்லன் செய்யும் பொருள்கள்.

இவன் ஓர் உழவன். உழவனுக்குக் குடியானவன் என்றும் பெயர். உழவன் நிலத்தை உழுது பயிர் செய்வான். பயிர் வளர்ந்ததும் கதிர்கள் தோன்றுகின்றன. கதிர்களில் நெல் மணிகள் இருக்கும். நெல்லைக் குற்றி அரிசி எடுக்கிறோம். அரிசியால் சோறு சமைக்கலாம். சோறு நமக்கு முக்கியமான உணவு.

இன்னும் பல தொழிலாளிகள் இருக்கிறார்கள். நாம் சுகமாக வாழ்வதற்கு அவர்களுடைய உதவி அவசியம். ஆகையால், நாம் தொழிலாளிகளை மதித்து நடக்க வேண்டும்.

நகை	கொலுசு	பிசைதல்	களிமண்
பூட்டு	சுகமாக	சமையல்	காய்ச்சுதல்
சாவி	பொருள்	பாத்திரம்	கிண்ணம்
கதிர்	கோடரி	சுழற்றுதல்	வளையல்
அரிசி	அரிவாள்	மண்வெட்டி	வைரம்
உதவி	குற்றுதல்	தொழிலாளி	இரும்பு

கேள்விகள்

1. குயவன் எதனால் பாத்திரங்களைச் செய்வான்?
2. பொன்னால் என்ன நகைகள் செய்யலாம்?
3. கொல்லன் செய்யும் பொருள்கள் யாவை?
4. உழவனுக்கு வேறு பெயர் என்ன?
5. நமக்கு முக்கியமான உணவு எது?

பயிற்சி

1. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லை எழுது:

(செம்மான், தோட்டி, தச்சன், தையற்காரன் கன்னான், வண்ணான், கொத்தன்.)

(1) மர வேலை செய்பவன்——.

(2) —— பித்தளைச் சாமான்கள் செய்வான்.

(3) வீடு கட்டுபவன் ——.

(4) —— தெருக்களைச் சுத்தம் செய்வான்.

(5) துணிகளை வெளுப்பவன் ——.

(6) —— செருப்புத் தைப்பான்.

(7) சட்டை தைப்பவன் ——.

2. இவற்றை மௌனமாய்ப் படி:

சாமான் – சாமான்கள்; பாத்திரம் – பாத்திரங்கள்.

3. மேலே காட்டியது போல் இவற்றை மாற்றி எழுது:

சக்கரம் ________	பானை ________
வளையல் ________	நகை ________
பொருள் ________	கதிர் ________
தொழில் ________	மணி ________



12. காகம்

காகம் ஒரு பறவை. அதை நாம் எங்கும் காணலாம். காகங்களில் இரண்டு வகை உண்டு. ஒரு வகைக் காகம் மிகக் கறுப்பாகவும், பெரியதாக வும் இருக்கும். அதற்கு அண்டங் காக்கை என்று பெயர். மற்ருெரு வகைக் காகம் சிறியதாய் இருக்கும். அதன் கழுத்தும், உடலும் சாம்பல் நிறமாய் இருக்கும். அதற்கு மணிக் காக்கை என்று பெயர்.

காகம் அதிகாலையில் எழுந்திருக்கும். அது கா! கா! என்று கரையும். அது பகலில் இரை தேடும்; கிடைத்த இரையைத் தனியாக உண்ணுது: மற்றக் காகங்களையும் கரைந்து அழைக்கும். காகங்கள் எல்லாம் ஒன்ருகக் கூடி அந்த இரையைத் தின்னும். காகம் மாலையில் குளிக்கும். பின்னர், தன் இடத்தை அடையும்.

காகம் திருட்டுக் குணம் உள்ளது. அது சிறுவர் கையில் இருக்கும் பண்டங்களைத் திருடிச் செல்லும்; ஆள் இல்லாத சமயம் பார்த்துச் சமையல் அறையில் புகுந்தும் திருடும்.

காகத்தின் அலகு நீளமாகவும் உறுதியாகவும் இருக்கிறது. அது தன் அலகினால் பழங்களைக் கொத்தித் தின்னும். அது தன் அலகைச் சரித்துத் தானியங்களை அள்ளிச் செல்லும். அழுகின பழங்கள், இறந்துகிடக்கும் பிராணிகள் முதலியவற்றையும் காகம் தின்னும். அது அசுத்தப் பொருள்களைத் தின்று தெருவைச் சுத்தம் செய்கிறது. ஆகையால், காகத்துக்கு ஆகாயத் தோட்டி என்று ஒரு பெயர் உண்டு.

காகம் ஊர்ப் பக்கத்தில் உள்ள உயர்ந்த மரங்களில் கூடுகட்டும். காகம் தன் குஞ்சுகளிடம் அன்பாக இருக்கும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது ஒரு பழமொழி.

இரை	**உறுதி**	**பண்டம்**	**அதிகாலை**
பகல்	**குஞ்சு**	**சரித்து**	**தனியாக**
மாலை	**கழுத்து**	**சமயம்**	**தானியம்**
குணம்	**திருட்டு**	**சாம்பல்**	**தோட்டி**
நீளம்	**சிறுவர்**	**கரையும்**	**ஆகாயம்**

கேள்விகள்

1. இரண்டு வகைக் காகங்கள் யாவை ?
2. காகம் இரை கிடைத்தால் என்ன செய்யும் ?
3. காகத்தை ஆகாயத் தோட்டி என அழைப்பது ஏன் ?
4. காக்கையைப் பற்றி ஒரு பழமொழி சொல்லு.

பயிற்சி

1. பின் வரும் சொற்களைப் படி ; அவை ஒன்றுக்கொன்று எதிரான அர்த்தம் உள்ளதைக் கவனி :

பெரியது X சிறியது. நீளம் X குட்டை.
சுத்தம் X அசுத்தம். பக்கம் X தூரம்.

2. மௌனமாகப் படி :

நான் நடப்பேன். நாம் நடப்போம்.
நாங்கள் நடப்போம்.

நீ நடப்பாய். நீர் நடப்பீர்.
நீங்கள் நடப்பீர்கள்.

இராமன் நடப்பான். அவன் நடப்பான்.
சரஸ்வதி நடப்பாள். அவள் நடப்பாள்.
ஆசிரியர் நடப்பார். அவர் நடப்பார்.
மனிதர்கள் நடப்பார்கள். அவர்கள் நடப்பார்கள்.

குதிரை நடக்கும். அது நடக்கும்.
பசுக்கள் நடக்கும். அவை நடக்கும்.

13. உண்மை பேசுதல்

படங்களைப் பார்; கதையைச் சொல்:



14. ஓடி விளையாடு பாப்பா

1. ஓடி விளையாடு பாப்பா ! — நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா ! — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

2. சின்னஞ் சிறுகுருவி போலே — நீ
திரிந்து பறந்துவா பாப்பா !
வன்னப் பறவைகளைக் கண்டு — நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா !

3. கொத்தித் திரியும்அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா !
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா !

4. பாலைப் பொழிந்துதரும் பாப்பா! —அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வாலைக் குழைத்துவரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா !

5. வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும்நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா !

— தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்



15. புகைவண்டி ஏறுதல்

தந்தை : குழந்தாய்! நாம் புகைவண்டி நிலையத்துக்கு வந்து விட்டோம். வண்டியும் அதோ வந்து விட்டது. இரண்டு பக்கமும் பார். கூட்டம் அதிகமாய் இருக்கிறது.

மகன் : அப்பா! நாம் வண்டியில் ஏறுவது எப்படி ?

தந்தை : வண்டியில் ஏறப் பிரயாணச் சீட்டு வாங்க வேண்டும். நீ இங்கே இரு. நான் போய்ச் சீட்டு வாங்கி வருகிறேன்.

மகன் : இவ்வளவு கூட்டம் இருக்கிறதே ! வண்டி வருவதற்குள் சீட்டு வாங்க முடியுமா ?

தந்தை : இதோ பார். எல்லோரும் வரிசையாக நிற்கிறார்கள். நானும் இந்த வரிசையில்தான் நிற்க வேண்டும். இன்னும் சிறிது நேரத்தில் சீட்டு வாங்கி விடலாம். பிறகு வண்டிக்குப் போவோம்.

மகன் : நான் இங்கே நிற்கிறேன், அப்பா.

(தந்தை சீட்டு வாங்கி வருகிறார்)

தந்தை : சீட்டு வாங்கி விட்டேன். வண்டி ஏறலாம், வா.

மகன் : அதோ! வண்டி வந்து விட்டது! அப்பா! இந்த வண்டி இங்கே எவ்வளவு நேரம் நிற்கும்?

தந்தை : இங்கே ஐந்து நிமிஷம்தான் நிற்கும்.

மகன் : கூட்டம் அதிகமாய் இருக்கிறது. நாம் சீக்கிரம் ஏறிக் கொள்வோமே?

தந்தை : கூடாது; இறங்குபவர்கள் முதலில் இறங்கட்டும். பின்னர்தான் நாம் ஏற வேண்டும்.

மகன் : இப்பொழுது எல்லோரும் இறங்கி விட்டார்கள். நாம் ஏறிக் கொள்வோமா?

தந்தை : சரி, நீ முன்னே ஏறிக்கொள். நான் உனக்குப் பின்னால் ஏறிக்கொள்வேன்.

(இருவரும் ஏறுகிறார்கள். வண்டி புறப்படுகிறது)

மகன்	அதிகார்	இங்கே	புகைவண்டி
தந்தை	ஏறுவது	இரண்டு	எல்லோரும்
பின்னர்	வரிசை	குழந்தை	வருவதற்குள்
கூட்டம்	நிமிஷம்	நிற்பவர்	இறங்குபவர்
நிலையம்	முடியும்	இவ்வளவு	பிரயாணச் சீட்டு

கேள்விகள்

1. புகை வண்டி நிற்கும் இடத்தின் பெயர் என்ன?
2. சீட்டு வாங்கும் முறை யாது?
3. வண்டியில் ஏறும் முறை என்ன?

பயிற்சி

1. எதிர்ப் பதம் எழுது :

அதிகம் × ———. ஏறுவது × ———.

முன்னே × ———. முடியும் × ———.

2. கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) புகை வண்டியில் ஏறப் ——— வாங்க வேண்டும்.

(2) எல்லோரும் ——— நிற்கிறார்கள்.

(3) இறங்குபவர்கள் ——— இறங்கட்டும்.

(4) இப்பொழுது ———இறங்கி விட்டார்கள்.

3. மௌனமாய்ப் படி :

நான் வந்தேன். நீ என்னோடு வந்தாய்.
நானும் நீயும் வந்தோம். நாம் வந்தோம்.

நான் வந்தேன். அவன் என்னோடு வந்தான்.
நானும் அவனும் வந்தோம். நாங்கள் வந்தோம்.

நீ வந்தாய். அவன் உன்னோடு வந்தான்.
நீயும் அவனும் வந்தீர்கள். நீங்கள் வந்தீர்கள்.

16. எங்கள் ஊர்

நான் ஒரு சிறிய ஊரில் வசிக்கிறேன். சிறிய ஊருக்குச் சிற்றூர் என்று பெயர். சிற்றூரைக் கிராமம் என்றும் சொல்லலாம். எங்கள் ஊரின் பெயர் புத்தூர்.

எங்கள் ஊரில் நான்கு தெருக்கள் இருக்கின்றன. எங்கள் வீடு தெற்குத் தெருவில் இருக்கிறது. எங்கள் தெருவில் முப்பது வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் பின்புறம் தோட்டம் உண்டு. நாங்கள் தோட்டத்தில் காய்கறிகள் பயிரிடுகிறோம். வீட்டின் முன்புறம் முற்றம் இருக்கிறது. முற்றத்தில் நாங்கள் பூச்செடிகள் வளர்க்கிறோம்.

எங்கள் ஊருக்கு வடக்கில் ஒரு வாய்க்கால் ஓடுகிறது. அந்த வாய்க்காலில் நாங்கள் குளிப்போம்; துணிகள் துவைப்போம்; ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுவோம். குடிப்பதற்கு வேண்டிய தண்ணீரைக் கிணற்றிலிருந்து எடுக்கிறோம்.

வாய்க்கால் நீரினால் உழவுத் தொழில் நடைபெறுகிறது.

எங்கள் ஊரில் தோட்டிகள் இல்லை. ஆயினும், எங்கள் ஊர் சுத்தமாகவே இருக்கிறது. குப்பை கூளங்களை நாங்கள் தெருவில் கொட்டுவது இல்லை. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் ஒரு குப்பைக் குழி இருக்கிறது. அந்தக் குழியில் குப்பை கூளங்களைச் சேர்த்து வைப்போம். சாணத்தையும் அதிலே சேர்த்து வைப்போம். அவை நன்றாகக் கலந்து சிறந்த உரம் ஆகும். இந்த உரத்தையும், இலை, தழைகளையும் வயலுக்கு எருவாக இடுகிறோம்.

எங்கள் ஊரில் சண்டை, சச்சரவுகள் இல்லை. ஏதேனும் வழக்குகள் ஏற்பட்டால், ஊரில் உள்ள பெரியவர்கள் விசாரிப்பார்கள், அவர்கள் கூறும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நாங்கள் நடப்போம். இவ்வாறு, எங்கள் ஊரில் உள்ள எல்லோரும் ஒரு குடும்பத்தார்களைப் போல வாழ்ந்து வருகிறோம்.

சிற்றூர்	சண்டை	நியாயம்	பெரியவர்கள்
தெற்கு	சாணம்	புத்தூர்	காய்கறிகள்
முப்பது	தண்ணீர்	ஒவ்வொரு	வாய்க்கால்
முற்றம்	கிராமம்	தோட்டம்	குப்பைகூளம்
வடக்கு	பூச்செடி	பயிரிடுதல்	குப்பைக்குழி
வழக்கு	சச்சரவு	நெற்பயிர்	விசாரித்தல்

கேள்விகள்

1. எதற்குச் சிற்றூர் என்று பெயர்?
2. புத்தூரில் வாய்க்கால் எங்கு ஓடுகிறது?

3. வாய்க்கால் நீரின் உபயோகங்கள் என்ன ?
4. புத்தூரில் வழக்குகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன ?

பயிற்சி

1. பழம் என்பது ஒருபொருளின் பெயர். ஒருபொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும்.

பழங்கள் என்பது பல பொருள்களின் பெயர்.

பல பொருள்களைக் குறிப்பது பன்மை எனப்படும்.

2. பின்வரும் ஒருமைப் பெயர்களுக்குப் பன்மை எழுது :

கிராமம், வீடு, தோட்டம், சுவர், வழக்கு, பூ.

3. மௌனமாய்ப் படி ; திசைகளை அறிந்து கொள் :

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.

சூரியன் மறையும் திசை மேற்கு.

நீ கிழக்குத் திசையை நோக்கி நில் ;

உன் கைகளை இருபக்கங்களிலும் நேராக நீட்டு.

இப்பொழுது உன் வலது கைப் பக்கம் தெற்கு.

உன் இடது கைப் பக்கம் வடக்கு.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று திசைகள் நான்கு.

17. நீல மாம்பழம்

ஓர் ஊரில் கிழவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நீலன்.

நீலன் ஒருநாள் சந்தைக்குப் போனான். சந்தையில் மாம்பழங்கள் மலிவாக விற்றன. நீலன் ஒரு ரூபாய்க்குப் பன்னிரண்டு மாம்பழங்கள் வாங்கினான்.

நீலனுக்குப் பிள்ளைகள் இல்லை. அவன் தனியாக ஒரு குடிசையில் வாழ்ந்தான். அவன் சிறுவர்களிடம் அன்பாக இருப்பான். அவன் சந்தையிலிருந்து திரும்பி வந்ததும், சில சிறுவர்கள் அவனது குடிசைக்கு வந்தார்கள். நீலன் அந்த மாம்பழங்களை எடுத்து, முதலில் தோலைச் சீவினான். பின்னர் சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சில துண்டுகளைத் தின்றான்; அந்தச் சிறுவர்களுக்கும் சிலவற்றைக் கொடுத்தான். மாம்பழங்கள் மிகவும் இனிப்பாக இருந்தன.

நீலன், அம் மாங்கொட்டைகளைத் தன் தோட்டத்தில் ஊன்றித் தண்ணீர் ஊற்றினான். சில நாட்களில் கொட்டைகளிலிருந்து, கன்றுகள் தோன்றின. அக் கன்றுகள் சிறிது உயரம் வளர்ந்த பிறகு, அவன் அவற்றை அந்த ஊரில் உள்ள பொது நிலத்தில் நட்டு வைத்தான். அவற்றிற்கு வேலி அடைத்து, ஒழுங்காகத் தண்ணீர் ஊற்றினான். அவை செழித்து வளர்ந்தன.

நீலன் இவ்வாறு செய்ததைக் கண்டு, சிலர் அவனைக் கேலி செய்தார்கள். "நீலா! நீயோ கிழவன் ஆகிவிட்டாய். உனக்குப் பிள்ளைகளும் இல்லை

இந்த மாங்கன்றுகள் பலன் கொடுக்க ஐந்து ஆண்டுகளாவது ஆகும். யாருக்காக நீ இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாய்?" என்று ஒருவர் நீலனிடம் கேட்டார்.

நீலன் அவரை நோக்கி, "ஐயா! நமது முன்னோர் நட்டு வைத்த மரங்கள் நமக்குப் பலன் தருகின்றன. அது போலவே, நாமும் சில மரங்களை நட்டு வைத்தால், நமக்குப் பின்னால் வருபவர்களுக்கு அவை பலன் தரும். இந்த மரங்களின் பழத்தைத் தின்பவர்கள் என் பெயரைச் சொல்வார்கள் அல்லவா?" என்றான்

பின்னர் சில நாட்களில் நீலன் இறந்தான். ஆனால், அவன் வளர்த்த மாமரங்கள் பலன்

கொடுத்தன. ஊரில் உள்ளவர்கள் அந்த மாமரத்தின் பழத்தை நீலன் மாம்பழம் என்று அழைத்தார்கள். அதுவே பிற்காலத்தில் நீல மாம்பழம் என்று வழங்கி வருகிறது.

மலிவு	கிழவன்	மாமரம்	மாம்பழம்
அன்பு	குடிசை	முன்னொரு	வார்த்தல்
வேலி	சீவுதல்	செழித்து	உழைத்தல்
கேலி	கஷ்டம்	முன்னோர்	பன்னிரண்டு

கேள்விகள்

1. நீலன் எத்தனை மாம்பழங்கள் வாங்கினான் ?

2. நீலன் மாங்கன்றுகளை எங்கே நட்டான் ?

3. மாங்கன்றுகள் பலன் கொடுக்க எவ்வளவு காலம் ஆகும் ?

4. நீலன் மாம்பழம் என்ற பெயர் இப்பொழுது எவ்வாறு வழங்குகிறது ?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களை நிரப்பு

(1) சந்தையில் ——— மலிவாக விற்றன.

(2) அவன் ——— ஒரு ———வாழ்ந்தான்.

(3) ——— மாம்பழங்கள் நல்ல —— இருந்தன.

(4) அவை செழித்து ———.

(5) நீயோ ——— ஆகிவிட்டாய்.

2. மௌனமாகப் படி; வார்த்தைகள் சேரும் விதத்தைக் கவனி:

மா + கன்று = மாங் கன்று.

மா + கொட்டை = மாங் கொட்டை.

மா + மரம் = மாமரம். மா + பழம் = மாம்பழம்.

பூ + செடி = பூச்செடி. மரம் + தட்டு = மரத்தட்டு

18. பருவ காலங்கள்

வாரத்தின் நாட்கள் ஏழு. வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக் கிழமை. வாரத்தின் கடைசி நாள் சனிக்கிழமை. ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன வாரத்தின் ஏழு நாட்கள்.

முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். வருஷத்திற்கு ஆண்டு என்றும் பெயர் உண்டு.

தமிழ் ஆண்டு சித்திரை மாதத்தில் ஆரம்பிக்கிறது; பங்குனி மாதத்தில் முடிகிறது. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன தமிழ் மாதங்கள்.

இங்கிலீஷ் வருஷம் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கிறது; டிசம்பர் மாதத்தில் முடிகிறது. ஜனவரி, பெப்ருவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என்பன இங்கிலீஷ் மாதங்கள்.

சித்திரை, வைகாசி மாதங்களில் வெயில் அதிகமாய் இருக்கும். அந்தக் காலத்திற்கு இளவேனிற் காலம் என்று பெயர்.

ஆனி, ஆடி, மாதங்களில் காற்று அதிகமாய் இருக்கும்; வெயில் குறைய ஆரம்பிக்கும். அந்தக் காலத்திற்கு முதுவேனிற் காலம் என்று பெயர்.

ஆவணி, புரட்டாசி மாதங்களில் மழை ஆரம்பிக்கும். அந்தக் காலத்திற்குக் கார் காலம் என்று பெயர்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பூமி நன்றாய்க் குளிர்ந்து இருக்கும்; மழையும் அதிகமாகப்பெய்யும். அந்தக் காலத்திற்குக் குளிர் காலம் என்று பெயர்.

மார்கழி, தை மாதங்களில் பனி ஆரம்பிக்கும். இரவின் முற்பகுதியில் பனி பெய்யும். அந்தக் காலத்திற்கு முன்பனிக் காலம் என்று பெயர்.

மாசி, பங்குனி மாதங்களில் பனி அதிகமாய் இருக்கும். இரவின் பிற்பகுதியில் பனி பெய்யும். அந்தக் காலத்திற்குப் பின்பனிக் காலம் என்று பெயர்.

இள வேனிற் காலம், முது வேனிற் காலம், கார் காலம், குளிர் காலம், முன் பனிக்காலம், பின் பனிக்காலம், என்ற இவை ஆறும் பருவ காலங்களாகும்.

பூமி	முடிவு	கடைசி	பின் பனி
கார்	மாதம்	முப்பது	முன் பனி
மழை	ஆண்டு	வருஷம்	ஆரம்பம்
முதல்	வெயில்	நாட்கள்	இங்கிலீஷ்
குளிர்	பருவம்	முற்பகுதி	இளவேனில்
உரிய	காற்று	பிற்பகுதி	முதுவேனில்

கேள்விகள்

1. தமிழ் ஆண்டு எந்த மாதத்தில் ஆரம்பிக்கும் ?

2. இங்கிலீஷ் வருஷம் எந்த மாதத்தில் முடியும் ?

3. வெயில் அதிகமாய் இருக்கும் மாதங்கள் எவை ?

4. குளிர் அதிகமாய் இருக்கும் மாதங்கள் எவை ?

5. இரவின் பிற்பகுதியில் பனிபெய்யும் மாதங்கள் எவை ?

பயிற்சி

1- மௌனமாய்ப் படி :

நான் வந்தேன் — நான் வரவில்லை.

அவன் வருகிறான் — அவன் வரவில்லை.

அவள் வருவாள் — அவள் வரமாட்டாள்.

பசு வரும் — பசு வராது

2. பன்மையை ஒருமை ஆக்கு :

மாதங்கள் —— நாட்கள் ——

காலங்கள் —— பூக்கள் ——

மரங்கள் —— பறவைகள் ——

ஆடுகள் —— பசுக்கள் ——

மலைகள் —— மிருகங்கள் ——

19. நல்ல பையன்

1. காலையில் எழுவான் நல்லபையன்;
கடவுளைத் தொழுவான் நல்லபையன்.

2. கைகால் முகங்களைக் கழுவிடுவான்;
கருத்துடன் பாடங்கள் படித்திடுவான்.

3. பல்லை விளக்கிக் குளித்திடுவான்;
படைத்த உணவைப் புசித்திடுவான்.

4. பள்ளிக் கூடம் போய்ப்படிப்பான்;
படிப்பில் முதல்வன் எனஇருப்பான்.

5. மாலையில் ஆட்டம் ஆடிடுவான்.
மயங்கும் நேரம் திரும்பிடுவான்.

6. விளக்கின் ஒளியில் படிப்பானே;
விரித்த பாயில் படுப்பானே.

7. உண்மை ஒன்றே உரைத்திடுவான்;
உழைப்பில் ஊக்கம் காட்டிடுவான்.

8. பெரியவர் சொல்லைத் தட்டாமல்,
பேணி நடப்பான் நல்லபையன்;

9. அன்பாய் இருப்பவன் நல்லபையன்;
அன்பைப் பெறுபவன் நல்லபையன்.

—வி. மரிய அந்தோனி.

20. சந்தை

வேலன் : முருகா! சந்தை கூடி விட்டது. நான் காய்கறிகள் வாங்க வேண்டும். முதலில் வேக மாகச் சந்தையைச் சுற்றிப்பார்த்து விடுவோம். வா

முருகன் ; வேலா! இங்கே மூட்டை மூட்டை யாகப் புளி இருக்கிறதே! இவ்வளவும் விற்றுப் போகுமா ?

வேலன் : விற்காமல் என்ன ? மாலையில் வந்தால் புளி கிடைக்காது.

முருகன் : இதோ பார். மிளகாய் வற்றல் மூட்டைகள். அப்பா! காரம் மூக்கைத் துளைக் கிறது. தும்மல் கூட வருகிறது.

வேலன் : முருகா ! கிழங்குக் கடைகளைப்பார். எத்தனை வகைக் கிழங்குகள்!

முருகன் : வேலா! இந்தப்பக்கம் திரும்பிப்பார், வெங்காயம் மலைபோல் குவிந்துகிடக்கிறது!

வேலன் : ஆம். இங்கு வெங்காயத்தை நிறுத்து விற்கிறார்கள். பக்கத்தில் வெள்ளைப் பூண்டு கூறு கட்டி வைத்திருப்பதைப் பார்.

முருகன் : வேலா! சந்தைக்குள் பலசரக்குக் கடைகள் உண்டா?

வேலன் . அந்தப் பக்கத்தில் பார். பலசரக்குக் கடைகள் வரிசை வரிசையாக இருக்கின்றன. மஞ்சள், கடுகு, சீரகம் முதலிய பொருள்களை நாம் அங்கு வாங்கலாம்.

முருகன் : அருகில் இருப்பவை பழக் கடைகள் அல்லவா? வாழைக் குலைகள் சிலவற்றைத் தொங்க விட்டிருக்கிறார்கள். வேறு சிலவற்றை அடுக்கி வைத்திருக்கிறார்கள். சில வண்டிகளிலும் வாழைக் குலைகள் நிறைய இருக்கின்றன.

வேலன் : முருகா! பக்கத்தில் வாழை இலை களைப் பார். அருகில் தேங்காய்களைக் குவித்து வைத்திருக்கிறார்கள்.

முருகன் : இங்கு வ்ந்தவுடன் மணம் கம் மென்று வீசுகிறது. பூக்கடைகள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன.

வேலன் : முருகா! வெயில் ஏறுகிறது. காய் கறிகள் வாங்கவேண்டாமா ?

முருகன் : ஆம், காய்கறிகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போவோம். இன்னொரு நாள் வந்து மற்ற இடங்களையும் சுற்றிப் பார்க்கலாம்.

கூறு	தும்மல்	மிளகாய்	கம்மென்று
கடுகு	கிழங்கு	இன்னெரு	வெங்காயம்
பூண்டு	சீரகம்	பலசரக்கு	காய்கறிகள்
வற்றல்	முட்டை	தேங்காய்	வாழைக்குலே

கேள்விகள்

1. மிளகாய் வற்றலின் காரம் என்ன செய்யும் ?
2. வெங்காயத்தை எவ்வாறு விற்கிருர்கள் ?
3. பலசரக்குக் கடைகளில் என்னென்ன வாங்கலாம் ?

பயிற்சி

மௌனமாய்ப் படி ; தடித்த சொற்களைக் கவனி :

அணில் பழத்தைத் தின்கிறது.
நாம் காலால் நடக்கிருேம்.
நீ என்னேடு வந்தாய்.
உழவன் ஏருடன் போகிருன்.
பணத்தை அவனுக்குக் கொடு.
இவன் ஊரிலிருந்து வருகிருன்.
இது எனது புத்தகம்.
இவள் என்னுடைய தங்கை.
கிணற்றினுள் தண்ணீர் இருக்கிறது.
காட்டில் விலங்குகள் திரியும்.

21. நரியும் வெள்ளாடும்

ஒரு நாள் ஒரு நரி காட்டில் இரை தேடி அலைந்தது. வெயிலில் அலைந்து திரிந்ததனால், அதற்கு அதிக தாகம் ஏற்பட்டது. தாகத்தைத் தணிப்பதற்குத் தண்ணீர் எங்கும் கிடைக்கவில்லை.

நரி தண்ணீரைத் தேடி ஓர் ஊர்ப் பக்கம் வந்தது. அங்கே ஒரு குழி இருந்தது. அந்தக் குழியின் அடியில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. குழியினுள் இறங்குவதற்குப் படிகள் இல்லை. நரிக்குத் தாகம் தாங்க முடியவில்லை. அது யோசனை செய்யாமலேயே குழியினுள் குதித்தது.

நரி தன் தாகம் தணியும் வரையில் அந்தத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்ததும், அது வெளியே வர முயற்சி செய்தது. படிகள் இல்லாத தால், மேலே ஏறி வர முடியவில்லை. அது துள்ளிக் குதித்து வெளியே வர முயன்றது. குழி சிறிது ஆழமாய் இருந்ததனால் அது வெளியே வர முடியாமல் திகைத்தது.

அப்பொழுது, அங்கே ஒரு வெள்ளாடு வந்தது. குழியினுள் சத்தம் உண்டாவதைக் கேட்டு வெள்ளாடு உள்ளே எட்டிப் பார்த்தது. குழியினுள் நரி இருப்பதைக்கண்ட வெள்ளாடு நரியை நோக்கி, "நண்பா! குழியில் விழுந்து விட்டாயே; எப்படி வெளியே வருவாய்?" என்று கேட்டது.

நரி சிறிது யோசித்து வெள்ளாட்டை நோக்கி, "நண்பா! நான் வெளியே வர வேண்டிய தேவையே இல்லை. ஏனென்றால் இந்தத் தண்ணீர்

மிக இனிமையாய் இருக்கிறது. இதைக் குடித்தால் பசியும் தாகமும் தீர்ந்து சுகமாய் இருக்கலாம்'' என்றது.

வெள்ளாடு நரியின் பேச்சை நம்பியது. தானும் அந்தத் தண்ணீரைக் குடிக்க ஆவல் கொண்டு உடனே அந்தக் குழியினுள் குதித்தது.

நரி உடனே வெள்ளாட்டின் முதுகில் ஏறி, அங்கிருந்து துள்ளிக் குதித்து வெளியே வந்தது.

வெள்ளாடு நரியை நோக்கி, "நண்பா! என்னை ஏமாற்றி விட்டாயே!'' என்று சொன்னது. நரி, நான் ஏமாற்றினால் நீ ஏன் ஏமாந்தாய்?'' என்று சொல்லிக் கொண்டே ஓடிப் போயிற்று.

வஞ்சகர் பேச்சை நம்பலாகாது.

சுகம்	பேச்சு	குதித்தல்	~~கொஞ்சம்~~
ஆழம்	முயற்சி	வெளியே	திகைத்தல்
ஆவல்	தேவை	வஞ்சகர்	வெள்ளாடு
தாகம்	யோசனை	நம்புதல்	அப்பொழுது
சத்தம்	தணித்தல்	துள்ளுதல்	ஏமாற்றுதல்

கேள்விகள்

1. *நரி ஏன் குழியினுள் குதித்தது?*
2. *குழியினுள் இருந்த நரியிடம் வெள்ளாடு என்ன கேட்டது?*
3. *நரி எவ்வாறு வெள்ளாட்டை ஏமாற்றியது?*
4. *நரி என்ன சொல்லி ஓடிப் போயிற்று?*
5. *இந்தக் கதையினால் நீ அறிவது என்ன?*

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு:

(1) ———— *இறங்குவதற்குப் படிகள் இல்லை.*

(2) *குழியின்* ———— *நரி இருப்பதை வெள்ளாடு கண்டது.*

(3) *வெள்ளாடு நரியின்* ———— *நம்பியது.*

(4) *உடனே* ———— *அந்தக் குழியினுள் குதித்தது.*

மௌனமாகப் படி; வேறுபாட்டை நினைவில் வை:

சிங்கம் முழங்கும்,	*புலி உறுமும்*
யானை பிளிறும்.	*குதிரை கனைக்கும்.*
கழுதை கத்தும்.	*பசு கதறும்.*
ஆடு கத்தும்.	*நரி ஊளையிடும்.*
நாய் குரைக்கும்.	*சேவல் கூவும்*
கோழி கொக்கரிக்கும்.	*மயில் அகவும்.*
ஆந்தை அலறும்.	*கோட்டான் குழறும்.*
குயில் கூவும்.	*காகம் கரையும்,*

22. நாணயங்கள்

நாம் சாமான் வாங்க கடைக்குப் போகிறோம். காசு கொடுக்காமல் சாமான் வாங்க முடியுமா? முடியாது. ஆதலால் நாம் நாணயத்தின் மதிப்பை அறிந்திருப்பது அவசியம்.

இது ஒரு கால் அணா நாணயம் இது செம்பு கலந்த ஒரு கலவை உலோகத்தால் செய்த நாணயம். மூன்று பை கொண்டது ஒரு காலணா.

இது அரை அணா நாணயம். இது ஒருவகை நிக்கல் நாணயம். ஆறு பை கொண்டது ஓர் அரையணா. இரண்டு காலணாக்கள் சேர்ந்தால் ஓர் அரையணா ஆகும்.

இது ஓர் அணா நாணயம். இதுவும் மேற்கூறிய நிக்கலினால் செய்த நாணயமே ஆகும். பன்னிரண்டு பை கொண்டது ஓர் அணா. ஓர் அணாவுக்கு இரண்டு அரையணாக்கள் கிடைக்கும். நான்கு காலணாக்கள் சேர்ந்தால் ஓர் அணா ஆகும்.

இது இரண்டு அணா நாணயம். இதுவும் அந்த நிக்கல் நாணயமே. அரைக்கால் ரூபாய் என்றும் இதைச் சொல்வது உண்டு. ஓர் இரண்டணா நாணயத்திற்கு இரண்டு ஓரணா நாணயங்கள் கிடைக்கும்.

இது கால்ரூபாய் நாணயம். இது சுத்தநிக்கல் உலோகத்தால் செய்த நாணயம். இதை நாலணா நாணயம் என்று சொல்வதும் உண்டு. இரண்டணா நாணயங்கள் இரண்டு சேர்ந்தால் ஒரு கால் ரூபாய் ஆகும்.

இது அரை ரூபாய் நாணயம். இதுவும் சுத்தமான நிக்கலினால் செய்த நாணயமே ஆகும். இது எட்டணா நாணயம் என்றும் சொல்லப்படும். ஓர்எட்டணா நாணயத்திற்கு இரண்டு கால் ரூபாய்கள் கிடைக்கும்.

இது ஒரு ரூபாய் நாணயம். இதுவும் சுத்த நிக்கல் நாணயமே. ஒரு ரூபாய்க்கு இரண்டு அரை ரூபாய்கள்; நான்கு கால் ரூபாய்கள்; எட்டு இரண்டணாக்கள்; பதினாறு அணாக்கள்; முப்பத்திரண்டு அரையணாக்கள்; அறுபத்து நான்கு காலணாக்கள்; நூற்றுத் தொண்ணூற்று இரண்டு பைகள். இந்த நாணயங்களைத் தவிர, ஒரு ரூபாய் நோட்டு, இரண்டு ரூபாய் நோட்டு, ஐந்து ரூபாய்நோட்டு, பத்து ரூபாய் நோட்டு முதலியனவும் நாணயங்களாக வழங்கி வருகின்றன. அவற்றைப்பற்றி நீங்கள் மேல் வகுப்புகளில் படிக்கலாம்.

காசு	செம்பு	கலவை	அரையணா
ஓரணா	பைசா	நாலணா	இரண்டணா
மதிப்பு	நிக்கல்	எட்டணா	நோட்டு
காலணா	ரூபாய்	நாணயம்	அரைக்கால்

1. சுத்தமான நிக்கல் நாணயங்கள் எவை ?
2. அரை ரூபாய்க்கு இரண்டணா நாணயங்கள் எத்தனை ?
3. ஒரு ரூபாய்க்கு எத்தனை கால் ரூபாய்கள் ?
4. கால் ரூபாய்க்கு எத்தனை காலணாக்கள் ?

பயிற்சி

1. இந்தத் தொடர்களைக் கவனி :

அவன் மரத்தை	எப்பொழுது வருவாய் ?
நீ வீட்டுக்கு	வாளால் அறுத்தான்.

இவற்றை நேராகச் சேர்த்தால் வாக்கியத்துக்கு அர்த்தம் இல்லை. பொருத்தம் பார்த்துச் சேர்க்க வேண்டும் -

அவன் மரத்தை வாளால் அறுத்தான்.

நீ வீட்டுக்கு எப்பொழுது வருவாய் ?

2. பின் வரும் தொடர்களைப் பொருத்தம் பார்த்துச் சேர் :

எட்டணா நாணயம்	வேகமாய் ஓடும்
பறவைகள் மரத்தில்	நரிகள் அதிகம்.
குதிரை அதிக	சுத்த நிக்கலால் செய்தது.
மண் பானைச்சமையல்	ஒருவகை நிக்கல் நாணயம்.
இந்தக் காட்டில்	உடலுக்கு நல்லது.
இரண்டணா நாணயம்	கூடு கட்டும்.

23. ஒற்றுமையே உறுதி தரும்

படங்களைப் பார்; கதையைச் சொல்லு:



24. நம்து கடமைகள்

1. காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலை முழுதும் விளையாட்டு —என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா!

2. பொய்சொல்லக் கூடாது பாப்பா!—
என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

3. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா

4. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா!—தாய்
சொன்னசொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி அழும்குழந்தை நொண்டி— நீ
திடங்கெண்டு போராடு பாப்பா

5. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாய்என்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்
6. ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

—தேசியகவி பாரதியார்

25. சுத்தம் சுகம் தரும்

தாய் : கண்ணு ! மணி பதினொன்று ஆகிறதே நீ இன்னும் பள்ளிக்கூடம் போகவில்லையா ?

கண்ணன் : நான் போனேன் அம்மா ! ஆசிரியர் என்னை வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

தாய் : ஏன் ? நீ என்ன குற்றம் செய்தாய் ?



கண்ணன் : நான் ஒரு குற்றமும் செய்யவில்லை அம்மா ! பள்ளிக்கூடம் போகும் வழியில் நானும், முருகனும் கோலி விளையாடினோம். சட்டை அழுக்காகி விட்டது.

தாய் : ஆம், இங்கிருந்து போகும் போது சுத்தமாய்ப் போனாய். தெருவில் விளையாடிக் கை கால் எல்லாம் ஒரே அழுக்கு !

கண்ணன் : அம்மா ! இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும் ?

தாய் : ஆசிரியர் என்ன சொன்னார் ?

கண்ணன் : குளித்துவிட்டுச் சுத்தமான சட்டைகள் அணிந்து கொண்டு வரச் சொன்னார்.

தாய் : அப்படியே செய். முருகன் எங்கே ?

கண்ணன் : அவன் தன் வீட்டுக்குப் போயிருக்கிறான்.

தாய் : சரி, அவனும் குளித்துச் சுத்தமான சட்டைகள் அணிந்து கொண்டுவருவான். நீயும் அவனோடு சேர்ந்து போ.

கண்ணன் : அம்மா! ஆசிரியர், "கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு; கூழ் ஆனாலும் குளித்துக் குடி" என்று சொன்னாரே : அது ஏன் ?

தாய் : அவர் சொன்னது சரிதான். நாம் அணியும் ஆடை கந்தையாய் இருந்தாலும், அதைத் துவைத்துச் சுத்தமாக அணிய வேண்டும். நாம் குடிப்பது கூழாய் இருந்தாலும், குளித்து உடம்பைச் சுத்தம் செய்த பின்னர் குடிக்க வேண்டும்.

கண்ணன் : நாம் எவற்றிலும் சுத்தமாய் இருக்க வேண்டும் ; அப்படித்தானே, அம்மா ?

தாய் : ஆம், சுத்தம் சுகம் தரும். குளித்துப் புதிய சட்டை அணிந்து கொள். பின்னர் பள்ளிக் கூடம் போ.

கண்ணன் : அப்படியே செய்கிறேன், அம்மா !

கூழ்	**குற்றம்**	**கந்தை**	**குளித்தல்**
சுகம்	**வழியில்**	**உடம்பு**	**குடிப்பது**
புதிய	**கோலி**	**பின்னர்**	**பதினொன்று**
ஆடை	**சட்டை**	**எவற்றிலும்**	**கசக்குதல்**
சுத்தம்	**அழுக்கு**	**ஆசிரியர்**	**துவைத்தல்**

கேள்விகள்

1. கண்ணன் வழியில் என்ன செய்தான்?
2. ஆசிரியர் கண்ணனை ஏன் வீட்டுக்கு அனுப்பினார்?
3. "கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு" என்பதன் கருத்து என்ன?
4. நாம் ஏன் சுத்தமாய் இருக்க வேண்டும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களை நிரப்பு:

(1) நான் ஒரு ———— செய்யவில்லை.

(2) ———— நான் என்ன செய்ய வேண்டும்?

(3) அவன் ———— வீட்டுக்குப்போயிருக்கிறான்.

(4) அவர் சொன்னது ———— .

2. மௌனமாய்ப் படி; தடித்துள்ள சொற்களைக் கவனி:

நீ நாள்தோறும் காலையில் **குளி**.
இது ஓர் ஆழமான **குழி**
கோழி கூவுவது **காலை** நேரம்.
ஏர் உழுவது **காளை** மாடு.
ஏலக்காய் **மலையில்** விளையும்.
அவன் **மழையில்** நனைந்தான்.
வெள்ளம் பெருகி ஓடுகிறது.
வெல்லம் இனிப்பாய் இருக்கும்.
அடுப்புக் **கரி** கறுப்பு நிறம்.
வாழைப் பூ **கறி** சமைக்க உதவும்.

26. வாழைமரம்

வாழை மரத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வாழை மரத்திற்குக் கிளைகள் இல்லை. அதன் இலைகள் பெரியவை. மரத்தின் உச்சியில் இலைகள் இருக்கும். இலைகள் நாலு பக்கமும் விரிந்து, குடை போல் காணப் படும்.

வாழையில் பல வகை உண்டு. மொந்தன், பேயன், பூவன், ரஸ்தாளி, பச்சை நாடான், செவ்வாழை, சிறுமலை வாழை என்பவை அவற்றுள் முக்கிய மானவை.

வாழை மரம் குருத்து விட்டு வளரும். குருத்து விரிந்து இலையாகும். இலை பட்டையோடு சேர்ந்து இருக்கும், ஒரு வாழைமரம் ஒரு குலையே தள்ளும். குலைக்குத் தாறு என்றும் பெயர் உண்டு தாறு போடுவதற்கு முன்னர், வாழை மரத்தில் ஒரு

சிறிய இலை தோன்றும். அந்த இலைக்குக் கண்ணாடி இலை என்று பெயர்.

வாழை மரத்தைப் பட்டைகள் மூடிக் கொண்டிருக்கும். தாறு போட்ட வாழை மரத்தின் பட்டைகளை உரித்தால், உள்ளே தண்டு இருக்கும், தண்டின் நுனியில் குலை அமைந்திருக்கும்.

பெரிய வாழை மரத்தின் அடியில் சில கன்றுகள் தோன்றும். தாய் வாழை தாறு போட்ட பின்னர், இந்தக் கன்றுகளைக் கிழங்கோடு பெயர்த்து வேறு இடத்தில் நட வேண்டும். ஒரு வாழைக்கும், மற்றொரு வாழைக்கும் இடையே பத்து அடி இடைவெளி இருக்கவேண்டும். வாழை மரம் ஓர் ஆண்டுக்குள் பலன் கொடுக்கும்.

வாழை மரம் மிகவும் பயன் உள்ளது. அதன் இலையில் உணவு உண்ணலாம். அதன் காயும், பூவும், தண்டும் கறி சமைக்க உதவும். வாழைப் பழம் எந்தக் காலத்திலும் கிடைக்கும். அது சிறந்த உணவு ஆகும். வாழை நாரினால் பூத் தொடுக்கலாம். அதைக் கொண்டு ஒரு விதமான பட்டாடை நெய்வதும் உண்டு.

தாறு போட்ட வாழை மரத்தை வெட்டிப் பந்தல் வாசலில் அலங்காரமாக நடுவது உண்டு. "வாழையடி வாழையாக வாழ வேண்டும்" என்று வாழ்த்துவது நம் நாட்டு வழக்கம்.

கிளை	**தண்டு**	**கிழங்கு**	**பெயர்த்து**
குலை	**கன்று**	**பந்தல்**	**இடைவெளி**
நுனி	**பயன்**	**வாசல்**	**உண்ணலாம்**
உச்சி	**குருத்து**	**நெய்வது**	**அலங்காரம்**
தாறு	**பட்டை**	**பட்டாடை**	**வாழ்த்துவது**

கேள்விகள்

1. வாழை மரத்தின் வகைகள் ஐந்து எழுது.
2. கண்ணாடி இலை என்பது என்ன?
3. வாழை மரத்தை எவ்வாறு நட வேண்டும்?
4. வாழை மரத்தின் பயன்கள் மூன்று எழுது.

பயிற்சி

1. கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லை எழுது:

(1) வாழை மரம் ஒரு —— போடும். (கொலை, குலை.)

(2) குலைக்குத் —— என்றும் பெயர் உண்டு. (தாறு, தாரு.)

(3) வாழைத் தண்டு —— சமைக்க உதவும். (கரி, கறி.)

2. வாக்கியங்களை மௌனமாய்ப் படி:

சிங்கம் குகையில் வாழும்.	குகை
யானை காட்டில் வசிக்கும்.	காடு
புலி புதரில் தங்கும்.	புதர்
எலி வளையில் வாழும்.	வளை
குருவி கூட்டில் வசிக்கும்.	கூடு
மீன் நீரில் வாழும்.	நீர்
பாம்பு புற்றில் இருக்கும்.	புற்று
வௌவால் கூரையில் தங்கும்.	கூரை
கிளியைக் கூண்டில் வளர்ப்பார்கள்.	கூண்டு
ஆந்தை பொந்தில் வசிக்கும்.	பொந்து
நாம் வீட்டில் வாழ்கிறோம்.	வீடு



27. கடிதத்தின் பிரயாணம்

பார்த்தால் நான் ஒரு காகித அட்டை. எனக்குக் கார்டு என்று பெயர். நான் தபால் ஆபீஸில் இருப்பேன். என் விலை முக்கால் அணா. என் அண்ணனுக்குக் கவர் என்று பெயர். அவன் இரண்டணா விலை உள்ளவன். விலை குறைவாய் இருப்பதனால், என்னையே பலர் விரும்பி வாங்குகிறார்கள்.

ஒரு நாள் கோபாலன் தபால் ஆபீஸுக்கு வந்தான். அவன் முக்கால் அணா கொடுத்து என்னை வாங்கினான். நான் அவனோடு என் பிரயாணத்தை ஆரம்பித்தேன். அவன் என் உடல் முழுவதும் எழுதினான். பிறகு, தஞ்சாவூரில் தபால் பெட்டியினுள் என்னைப் போட்டான். நான் அங்கே என் தோழர்களோடு சிறிது நேரம் இருந்தேன்.

நான் இருந்த பெட்டியை ஒரு தபாற் சேவகன் திறந்து என்னை வெளியே எடுத்தான். அவன் என் தலையில் முத்திரை அடித்தான். தலையே நொறுங்கிப்

போனதுபோல் எனக்குத் தோன்றியது. பின்னர், அவன் என்னையும், என் தோழர் சிலரையும் ஒரு பையினுள் போட்டுக் கட்டினான். நாங்கள் ஒரு கை வண்டியில் ஏறித் தஞ்சாவூர் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். சென்னைப்பட்டினம் செல்லும் புகைவண்டி தயாராய் நின்றது. தபாற் சேவகன் எங்களை அந்த வண்டியில் ஏற்றிவிட்டுத் திரும்பினான்.

நாங்கள் உல்லாசமாகவே சென்னையை அடைந்தோம். அங்கும் ஒரு தபாற் சேவகன் வந்து, எங்களைத் தூக்கிச் சென்றான். நாங்கள் சென்னையிலுள்ள தபால் ஆபீஸை அடைந்தோம் அங்கு ஒரு சேவகன் என் முதுகில் மீண்டும் ஒரு முத்திரை அடித்தான்.

பிறகு, ஒரு தபாற்காரன் என்னை எடுத்துச் சென்று வி. ராமராவ் என்பவரிடம் கொடுத்தான். அவர் என்னைப் பார்த்து ஓர் இடத்தில் சிரித்தார், வேறொரு இடத்தில் அழுதார். ஏன் என்று எனக்குத் தெரியாது. சில நாட்களின் பின்னர், அவர் என்னை இந்தக் குப்பைத் தொட்டியில் வீசினார். நான் இங்கேயே கிடக்கிறேன், என்னைச் சும்மா எடுத்துச் செல்வதற்கும் ஆள் இல்லை.

ஆபீஸ்	கடிதம்	வேகம்	முத்திரை
கவர்	கார்டு	சும்மா	கைவண்டி
பலர்	தபால்	காகிதம்	பிரயாணம்
உடல்	விரும்பி	தோழர்	நொறுங்கி
முதுகு	தயார்	சேவகன்	உல்லாசம்

கேள்விகள்

1. தபால் கார்டின் விலை என்ன ?
2. தபால் பெட்டியிலிருந்து கடிதங்களை எடுப்பவன் யார் ?
3. கடிதத்தை வீட்டில் கொண்டு வந்து கொடுப்பவன் யார் ?

பயிற்சி

1. எதிர்ப்பதம் கூறு :

பகல் ×	காலை ×
கிழக்கு ×	வடக்கு ×
பெரியவர் ×	ஆண் ×

இவற்றைத் தகுந்த இடங்களில் அமைத்துக் காட்டு :

(வரிசை வரிசையாக, சீப்புச் சீப்பாக, அடுக்கு அடுக்காக, சாரி சாரியாக, கொத்துக் கொத்தாக, குலை குலையாக.)

(1) மாங்காய்கள் ________ காய்த்திருக்கின்றன.

(2) தேங்காய்கள் ________ இருக்கின்றன.

(3) வாழைக்காய்கள் ________ இருக்கின்றன.

(4) பூவின் இதழ்கள் ________ இருக்கின்றன.

(5) மாணவர்கள் ________ போகிறார்கள்.

(6) எறும்புகள் ________ செல்கின்றன.

28. பூக்களின் அரசன்

[நாடகம்]

இடம் : ஒரு குளக்கரை.

காலம் : காலை.

பாத்திரங்கள் : தாமரைப் பூ, ரோஜாப் பூ, சூரியகாந்திப் பூ, மல்லிகைப் பூ மற்றப் பூக்கள்.

மல்லிகை : பூக்களே! விலங்குகளுக்கு அரசனாகச் சிங்கம் இருக்கிறது. பறவைகளின் மன்னனாகக் கருடன் விளங்குகிறது. நமக்கும் ஓர் இராஜா வேண்டாமா?

சூரிய காந்தி : நமக்கு ராஜா இல்லையா? நான் பூக்களின் மன்னவனாக இருப்பது மல்லிகைப் பூவுக்குத் தெரியாதோ?

ரோஜா : உன்னை அரசனாக நியமித்தவர் யார்?

சூரியகாந்தி : யார் நியமிக்க வேண்டும்? மங்களமான மஞ்சள் நிறம் எனக்கு இருக்கிறது. எனக்குக் கண்கள் ஆயிரம். விளக்குளுக்கு அரசனாக விளங்கும் சூரியனோடு எனக்கு நெருங்கிய உறவு இருக்கிறது. அரசனாய் இருப்பதற்கு என்னை விடத் தகுதி உள்ளவர் யார் ?

ரோஜா : சூரியகாந்தி! உன் வாயை மூடு. ரோஜா என்னும் பெயரும் ராஜா என்னும் பெயரும் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன!

சூரியகாந்தி : ரோஜாவே! நீ இந்த நாட்டைச் சேர்ந்தவன் அல்லன். உன் உடம்புமுழுவதும் ஒரே முள். வேலிக் காட்டுக்கு ராஜாவாக இருக்கத்தான் நீ தகுதி.

ரோஜா: முள் இருந்தால் என்ன? பெண்கள் என்னைத் தலையில் அணிந்து மகிழ்கிறார்கள். என் மணம் எல்லோருக்கும் இன்பம் அளிக்கிறது.

மல்லிகை : உங்களுக்குள் சண்டை வேண்டாம். தாமரைப் பூ ஏன் பேசாமல் இருக்கிறது?

தாமரை : நான் ஏன் பேசவேண்டும்? நீங்களாகப் பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். அதுவே எனக்கும் சம்மதம்.

மல்லிகை : பூக்களே! நான் சொல்வதை கேளுங்கள். பழம் என்றால் வாழைப் பழத்தைக் குறிக்கிறது. அது போலவே, பூ என்பது தாமரைப் பூவையே குறிக்கும். தாமரைப் பூ அழகும் மணமும் உள்ளது. அதற்கும் சூரியனோடு உறவு உண்டு. பகைவர் நெருங்காதபடி தண்ணீரின் நடுவில் அது இருக்கிறது, அதையே நாம் நமது அரசனாக அமைக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

ரோஜா ; மல்லிகையின் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. அப்படியானால் நமக்கு அரசனே வேண்டியதில்லை.

சூரியகாந்தி : மன்னன் வேண்டாம் என்பதை நான்-ஒப்புக் கொள்ள முடியாது. நான் தான் மன்னவனாக இருப்பேன்.

மல்லிகை : அரசனாக இருப்பது உன் இஷ்டம் அல்ல. நாங்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டால் தான் நீ ராஜாவாக இருக்க முடியும்.

தாமரை : மற்றப் பூக்களின் எண்ணம் என்ன?

மற்றப் பூக்கள்: எங்களுக்குத் தாமரைப்பூவே தலைவனாக இருக்க வேண்டும். இதுவே எங்கள் கருத்தாகும்.

மல்லிகை: சூரிய காந்தி! நீ என்ன சொல்கிறாய்?

சூரியகாந்தி: நான் என்ன சொல்வது?

மல்லிகை: நான் ஒரு முடிவு சொல்கிறேன். தாமரைப் பூவே நமக்கு அரசர்; சூரிய காந்தி நமக்கு முதல் மந்திரி; ரோஜா துணைமந்திரி. இது பூக்களுக்கெல்லாம் சம்மதந்தானே.

மற்றப் பூக்கள்: ஆம், ஆம், சம்மதமே.

மல்லிகை: பூக்களின் ராஜா தாமரைப் பூ. தாமரைப் பூவுக்கு........

மற்றப் பூக்கள்: ஜே!

பயிற்சி

சில மாணவர்கள் பூக்களாக இருந்துகொண்டு இந்த நாடகத்தை நடித்துக் காட்டுக.

29. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டுஉண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔயம் பேசேல்.
13. கண்டுஒன்று சொல்லேல்.
14. சனி நீராடு.
15. இணக்கம் அறிந்து இணங்கு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்
18. பருவத்தே பயிர் செய்,
19. வஞ்சகம் பேசேல்.
20. இளமையிற் கல்.

30. உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

6. நஞ்சுடனே ஒருநாளும்
பழக வேண்டாம்.

7. நல்லிணக்கம் இல்லாரோடு
இணங்க வேண்டாம்.

8. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.

9. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டாம்.

10. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.

11. மாற்றானை உறவென்று
நம்ப வேண்டாம்.

12. தனந்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.

13. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

14. கொலைகளவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

15. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

16. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

17. மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

18, முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

19. கருதாமல் கருமங்கள்
முடிக்க வேண்டாம்.

20. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.

21. செய்தநன்றி ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

22. புண்படவே வார்த்தைதனைச்
சொல்ல வேண்டாம்.

23, இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

24. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

பொன் மொழிகள்

அறிவுடை யோரே அனைத்தும் உடையவர்.

ஆத்திரம் என்றும் அல்லல் விளைக்கும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

ஈசன் அடியை ஏத்தித் தொழுவாய்.

உப்பிட் டவரை உள்ளளவும் நினை.

ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

என்றும் பிறர்க்கு நன்மையே செய்க.

ஏழை என்றால் மோழையும் பாயும்.

ஐயம் இன்றித் தெளிவுறக் கற்பாய்.

ஒற்றுமை இன்மை உயர்வைப் போக்கும்.

ஓங்கிய புகழுடன் உலகினில் விளங்கு.

ஔவை மொழியை அன்புடன் போற்று.

Siruvar Tamil Nattu Vachakam

FOR STANDARD II

BY

V. MARIA ANTONY, B. O. L.

★

THE IDEAL PUBLISHERS

No. 1, Chinnakammala St., :: TIRUCHIRAPPALLI

Wrapper Printed at Rainbow Printers, Tiruchirappalli.